இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் *8642/2009*

எம். ஆறுமுகம் ... மேல்முறையீட்டாளர்(கள்)

-எதிர்-

அம்மணியம்மாள் மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. தீபக் குப்தா:

1. மூல கவுண்டர் என்பவர், தனது இரண்டு மகன்களான பழனிசாமி (1-ஆம் பிரதிவாதி) மற்றும் ஆறுமுகம் (2-ஆம் பிரதிவாதி) ஆகியோருடன் வழக்குச் சொத்தின் பங்கு உரிமையர் ஆவார். மூல கவுண்டர் 28.12.1971 அன்று எந்தவொரு உயிலும் எழுதாமல் இறந்துவிட்டார். அவரது இறப்பின்பேரில், 1/3 பங்கு சொத்து ஒவ்வொரு மகனுக்கும் சென்றது, பங்குரிமையில் மூல கவுண்டரின் பங்கான மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு அவரது மனைவி (5-ஆம் பிரதிவாதி), இரண்டு மகன்கள் (1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகள்) மற்றும் மூன்று மகள்களான வாதி மற்றும் 3 மற்றும் 4-ஆம் பிரதிவாதிகள் ஆகியோருக்கு மரபுரிமையாக வந்தடைந்தது.

2. ஆறு சட்ட வாரிசுகளுக்கும் மரபுரிமையாக வந்தடையவேண்டிய மூல கவுண்டரின் பங்காக உள்ள சொத்து, ஒருபோதும் பாகப்பிரிவினை செய்யப்பட்டிருக்கவில்லையாதலால், அது சட்டப்படி பாகப்பிரிவினை செய்யப்படவேண்டும் என்று கோரி, 6.12.1989 அன்று அவரது இளைய மகள் ஓர் உரிமை வழக்கைத் தாக்கல் செய்தார். இரண்டு மகன்களால் தாக்கல் செய்யப்பட்ட

எதிர்வழக்குரையில் மூல கவுண்டரின் மரணத்திற்குப் பிறகு மகள்களான வாதி மற்றும் 3 மற்றும் 4-ஆம் பிரதிவாதிகள் மற்றும் தாயார் (5-ஆம் பிரதிவாதி) ஆகியோர் இரு மகன்களான 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக சொத்தில் தங்கள் உரிமைகளை கைதுறந்து, பதிவு செய்யப்பட்ட விடுதலைப் பத்திரத்தைக் கூட்டாக நிறைவேற்றியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகள், மேற்படி விடுதலைப் பத்திரத்தில் அச்சமயத்தில் இளவராக இருந்த வாதியும், அவரது இயல்புக் காப்பாளரும், சார்பாளராகவுமிருந்த தாயாரும் வாதி சார்பாக விடுதலைப் பத்திரத்தை நிறைவேற்றினர். அதேபோல், அச்சமயத்தில் இளவரான 2-ஆம் பிரதிவாதியின் காப்பாளராக 1-ஆம் பிரதிவாதி செயல்பட்டு, இரு மகன்களின் சார்பாக விடுதலைப் பத்திரத்தில் கையெழுத்திட்டார். 2-ஆம் பிரதிவாதி உரிமை வயதை அடைந்தபிறகு இரு சகோதரர்களான 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகளுக்கிடையே ஒரு பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் 24.4.1980 அன்று நிறைவேற்றப்பட்ட பிறகு, 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகள்தான் மேற்படி சொத்தின் உடைமையிலுள்ளனர். பாகப்பிரிவினை ஆவணத்திற்கு வாதியின் கணவர் சாட்சியாக இருந்தார் என்பதும், அவர் அதைப்பற்றி அறியாததுபோல் பாசாங்கு செய்யமுடியாது என்பதும் உறுதிபடக் கூறப்பட்டது. விடுதலைப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தொகை, சகோதரிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டது என்றும் சொல்லப்பட்டது.

3. வாதியால் தாக்கல் செய்யப்பட்ட பதில் வழக்குரையில் தாயார், நீதிமன்றத்தின் ஒப்பளிப்பின்றி வாதியின் பங்கை விட்டுக்கொடுக்க உரிமையில்லை என்பதால், விடுதலைப் பத்திரம் சட்டப்படி செல்லுபடியற்றது என்று வலியுறுத்தப்பட்டது.

4. தாயார், இளவர் மகளின் இயல்புக் காப்பாளராக செயல்பட்டுவந்தார் என்றும், மேலும் வாதியால், உரிமை வயதை அடைந்துவிட்டதன்பேரில் மூன்று ஆண்டுகள் காலவரையறைக்குள் விடுதலைப் பத்திரத்தை நீக்கறவு செய்ய எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் தீர்மானித்து விசாரணை நீதிமன்றம் உரிமை வழக்கைத் தள்ளுபடி செய்தது.

5. மேற்கண்ட தீர்ப்புரையால் மனக்குறையுற்று, வாதி உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு ஒன்றைத் தாக்கல் செய்தார், மூல கவுண்டரின் சட்டப்படியான வாரிசுகளின் கையிலுள்ள சொத்து, அவரது மரணத்திற்குப் பிறகு இந்து கூட்டுக் குடும்பச் சொத்தாக இருந்தது, மேலும் தாயார் காப்பாளராக செயல்பட்டிருக்கக்கூடாது என்ற முடிவுக்கு அது வந்தது. ஆகையால், விடுதலைப் பத்திரம் தொடக்கத்திலேயே செல்லுபடியாகாதது என்றும், அவ்வகையில் அது எதிர்க்கப்படவேண்டியதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும், சொத்து, மூல கவுண்டரின் அனைத்து சட்டப்பூர்வமான வாரிசுகளின் கூட்டுச் சொத்தாகவே இருந்துவந்ததாகக் கூறி நீதிமன்றம் வாதியின் வழக்கில் தீர்ப்பாணையிட்டது. எனவே, விசாரணை நீதிமன்றத்தில் 2-ஆம் பிரதிவாதியாக இருந்த சகோதரர் ஒருவரால் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. நாங்கள் மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஜெயந்த் முத் ராஜ் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்-வாதிக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர் ஆகியோரின் வாதங்களைக் கேட்டோம். இச்சங்கதிகள் மறுத்துரைக்கப்படவில்லை. மூல கவுண்டரிடமிருந்து மரபுரிமையாகப் பெறப்படும் சொத்து தொடர்பாக இளவர் மகள்களின் காப்பாளராக தாயார் செயல்படமுடியுமா? என்பதே ஒரே பிரச்சினையாகும்.

7. இப்பிரச்சினைகளை விவாதிக்கும் முன் இந்து இளவர்நிலை மற்றும் காப்பாண்மைச் சட்டம், 1956 (சுருக்கமாக சட்டம்), பிரிவு 6-ஐ குறிப்பிடுவது பொருத்தமானதாகும், அதன் தொடர்புடைய பகுதி பின்வருமாறு எடுத்துரைக்கிறது:

> "6. **இந்து இளவரின் இயல்புக் காப்பாளர்கள்.-** ஓர் இந்து இளவரின் உயிருடலைப் பொறுத்தும் (கூட்டுக் குடும்பச் சொத்தில் அவனுக்கு அல்லது அவளுக்குள்ள பிரிக்கப்படாத உரித்தம் நீங்கலாக) இளவரின் சொத்தைப் பொறுத்தும், அவருடைய இயல்பு காப்பாளர்கள் பின்வருவோர் ஆவர்-
>
> (அ) ஒரு சிறுவனாகவோ, மணமாகாத சிறுமியாகவோ இருக்கும்நேர்வில் - தந்தை அவருக்குப் பின்னர் தாய், ஆனால் ஐந்து வயது பூர்த்தியாகாத ஓர் இளவர் வழக்கமாகவே அவருடைய தாயின் காப்பில் இருந்து வருவார்;
>
> ..."

சட்டத்தின் பிரிவு 8-ஐயும் குறிப்பிடலாம், அதன் தொடர்புடைய பகுதி பின்வருமாறு எடுத்துரைக்கிறது:

> "8. **இயல்புக் காப்பாளரின் அதிகாரங்கள்.-** (1) ஓர் இந்து இளவரின் இயல்புக் காப்பாளர் இந்தப் பிரிவின் வகையங்களுக்கு உட்பட்டு இளவரின் நலனுக்கு வேண்டிய அல்லது இளவரின் உரிமைச் சொத்தினைக் கைவரப்பற்றவும், பாதுகாக்கவும் அல்லது பயனுடையதாக்கவும் தேவையான அல்லது தகுமான, உரிய

செயல்களைப் புரிவதற்கு அதிகாரமுடையவராவார்; ஆனால் காப்பாளர் எந்நேர்விலும் ஒப்பந்தம் வாயிலாக இளவரைத் தனிமுறையில் கட்டுப்படுத்த இயலாது.

(2) இயல்புக் காப்பாளர் நீதிமன்றத்தின் முன்அனுமதியின்றி.-

(அ) இளவரின் அசையாச் சொத்தின் பகுதி எதனையும் அடைமானம் வைத்தலோ, பற்றுப் பொறுப்புக்கு உட்படுத்தலோ, விற்பனை, கொடை, பரிமாற்றம் அல்லது பிறவகை உரிமைமாற்றம் செய்தலோ ஆகாது; அல்லது

(ஆ) அத்தகைய சொத்தின் பகுதி எதனையும் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படும் ஒரு காலவரைக்கு அல்லது இளவர் உரிமைவயதை அடையும் தேதி கடந்து ஓராண்டிற்கு மேற்படும் ஒரு காலவரைக்கு குத்தகைக்கு விடுதல் ஆகாது.

(3) உட்பிரிவு *(1)* அல்லது உட்பிரிவு *(2)*-ஐ மீறுகிறவகையில், இயல்புக் காப்பாளர் ஒருவரால் அசையாச் சொத்து எதுவும் அயலடைவு செய்யப்படுமாயின் அது இளவரோ, அவர் கீழ் உரிமைகோரும் ஒருவரோ எடுக்கும் நடவடிக்கையால் தவிர்தகு அயலடைவாகும்.

...."

இந்து மரபுரிமைச் சட்டம், *1956* (சுருக்கமாக மரபுரிமைச் சட்டம்), பிரிவு *4*(ஆ), பிரிவு *6*, பிரிவு *19* மற்றும் பிரிவு *30* தொடர்புடைய காலத்தில் உள்ளவாறு இது பின்வருமாறு எடுத்தியம்பப்பட்டுள்ளது:-

"4(ஆ) இந்தச் சட்டத்தின் தொடக்கத்தை ஒட்டி முன்பு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதுவும், அது இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள வகையங்களில் எதற்கும் ஒவ்வாதிருக்கின்ற அளவுக்கு இந்துக்களுக்குப் பொருந்துதலாகாது."

"6. **பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் உள்ள உரித்ததத்தின் இறங்கடைவு**:- இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்னர் இந்து ஆண் ஒருவர் இறந்துபோகும்போது, அச்சமயத்தில் மிதாக்ஷரா சட்டத்தின்படி பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் அவர் ஓர் உரித்தம் கொண்டிருக்குமிடத்து, அச்சொத்தில் அவருக்குள்ள அவ்வுரித்தம், பிறப்புவழி பங்குரிமையர்களில் எஞ்சியுள்ளவர்களுக்கு எஞ்சுரிமைவழி இறங்கடைவாகுமேயன்றி, இச்சட்டத்தின்படி அல்ல:

வரம்புரையாக: இறந்துபோனவர், இணைப்புப்பட்டியலின் வகை 1-இல் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு பெண் உறவினரையோ, அந்தப் பெண் உறவினர் மூலம் உரிமை கோருகிறவராய் வகை 1-இல் குறித்துரைக்கப்பட்டுள்ள ஓர் ஆண் உறவினரையோ, தமக்குப்பின் எஞ்சியுள்ளவராக விட்டுச்சென்றிருந்தால், மிதாக்ஷரா சட்டத்தின்படி பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் அந்த இறந்துபோனவரின் உரித்தம், இச்சட்டத்தின்படி, நேர்வுக்கேற்ப உயில்வழி அல்லது உயிலில்லாவழி இறங்குரிமை முறைப்படி இறங்கடைவதாகும்.

விளக்கம் 1 - இந்தப் பிரிவைப் பொறுத்தவரை, மிதாக்ஷரா சட்டத்தின்படி பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் உரிமைகோருகிற

இந்து ஒருவருக்குள்ள உரித்தம் என்பது அச்சொத்தில் அவர் பாகப்பிரிவினைக் கோருவதற்கு உரிமை கொண்டிருந்தாலும், இல்லாவிடினும், அவரது இறப்பை ஒட்டி முன்பு அச்சொத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால் அவருக்கு அச்சொத்தில் ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய பங்காகக் கொள்ளப்படுதல்வேண்டும்.

விளக்கம் 2 - இந்தப் பிரிவின் வரம்புரையில் அடங்கியுள்ள எதுவும், இறந்துபோனவரின் இறப்புக்கு முன்னர் பிறப்புவழி பங்குரிமை கொண்டிருந்த குடும்பத்திலிருந்து பிரிந்துசென்றுவிட்ட நபர் ஒருவரை அல்லது அவரது இறங்குரிமையர்களில் எவர் ஒருவரையும், உயில் எதுவும் எழுதப்படாத நிலையில் அவ்வரம்புரையில் குறிப்பிடப்பட்ட உரித்தத்தில் ஒரு பங்கினைக் கோருவதற்கு இயல்விப்பதாகப் பொருள்கொள்ளப்படுதலாகாது."

"19. **இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாரிசுகள் பொறுத்த இறங்குரிமை முறை.-** உயில் எழுதிவைக்காமல் இறந்துபோனவரின் சொத்தினை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாரிசுகள் ஒருசேர அடைவார்களாயின் அவர்கள்,-

(அ) இந்தச் சட்டத்தில் பிறவாறு வெளிப்படையாக வகைசெய்யப்பட்டிருந்தாலன்றி, கிளைக்கு ஒரு பங்கு என அல்லாமல் தலைக்கு ஒரு பங்கு என்கிற முறையிலும்; மற்றும்

(ஆ) கூட்டு நிலச் சொத்துரிமையினர் என அல்லாமல் பொது நிலச் சொத்துரிமையினர் என்கிற முறையில் அச்சொத்தினை அடைவர்."

"30. **உயில்வழி இறங்குரிமை.-** உயில்வழியாக அல்லது பிற விருப்பாவண ஏற்பாட்டின் வழியாக அயலடைவு செய்யப்படத்தக்க சொத்து எதனையும், இந்து ஒருவர், இந்திய வாரிசுரிமைச் சட்டம், 1925 (39/1925)-இன் வகையங்களுக்கு இணங்கவோ, இந்துகளுக்குப் பொருந்தத்தக்க நிலவுறும் பிற சட்டம் எதனின் வகையங்களுக்கு இணங்கவோ அயலடைவு செய்யலாம்.

விளக்கம் - மிதாக்ஷரா சட்டத்தின்படி, பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் இந்து ஆண் ஒருவருக்குள்ள உரித்தமோ, உரிமையர்களான தரவாடு, தாவழி இல்லம், குடும்பம் அல்லது காவரு சொத்தில், அதனைச் சார்ந்த உறுப்பினர் ஒருவருக்குள்ள உரித்தமோ அல்லது நிலவுறு பிற சட்டம் எதனிலும் உள்ள எது எவ்வாறிருப்பினும் இந்த உட்பிரிவின் பொருளின்படி அவளாலோ, அவனாலோ அயலடைவு செய்யப்படத்தக்க சொத்தாகக் கொள்ளப்படும்."

8. மூல கவுண்டரின் மரணத்திற்குப் பிறகு, கேள்விக்குரிய சொத்து, அவரது சட்டப்பூர்வமான வாரிசுகளால் அவர்களுக்குரிய தனிப்பட்ட உரிமைகளின்படி மரபுரிமையாக வந்தடையாமல் ஓர் இந்து பிரிக்கப்படாத குடும்பத்தின் சொத்தாகவே இருந்துவந்தது என மனுதாரருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. வி. பிரபாகர்

வாதிட்டுள்ளார். சொத்து ஓர் இந்து கூட்டுக் குடும்பச் சொத்து என்றும், கர்த்தாவான 1-ஆம் பிரதிவாதிதான் இளவருக்கு சார்பாற்றியிருக்கவேண்டும் என்று திரு. வி. பிரபாகர் கடுமையாக வலியுறுத்தினார். கர்த்தா, இந்து கூட்டுக் குடும்பத்தின் இளவர்களுக்கு காப்பாளராக இருந்தால் விடுதலைப் பத்திரம் என்று கூறப்படும் ஆவணம் ஒரு செல்லத்தகாத ஆவணம் என்று உயர் நீதிமன்றம் சரியாகத் தீர்மானித்தது.

9. அதற்குமாறாக, மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. ஜெயந்த் முத் ராஜ் வாதிட்டதாவது, மூல கவுண்டர் இறந்தபொழுது, அவரது இறப்பை ஒட்டி முன்னதாக ஒரு கருத்தியல்வான பாகப்பிரிவினை நிகழ்ந்ததாகக் கருதப்படுகிறது, அதில் எஞ்சியிருக்கின்ற பங்குரிமையர்களான 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகள், சொத்தில் ஒவ்வொருவரும் 1/3 பங்கினைப் பெற்றனர், மூல கவுண்டருக்குச் சொந்தமான எஞ்சிய 1/3 பங்கு, வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 8-இன்படி மரபுரிமையாக வந்தடையவேண்டும் என்பதாகும்.

10. நாம், வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 6-ஐ படிக்கும்போது, இந்து ஆண் ஒருவர் இறந்துபோகும்போது பங்குரிமைச் சொத்தில் அவருக்குள்ள உரித்தம், பிறப்புவழி பங்குரிமையர்களில் எஞ்சியுள்ளவர்களுக்கு எஞ்சுரிமைவழி இறங்கடைவாகுமேயன்றி, இச்சட்டத்தின்படி அல்ல என்று அதன் தொடக்கப் பகுதி குறிப்பிடுகிறது. அதாவது, சகோதரர்கள் மட்டுமே சொத்தினைப் பெறுவர் என்று இது அர்த்தமாகிறது. இருப்பினும், இறந்துபோனவர் இணைப்புப் பட்டியலின் வகை 1-இல் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு பெண் வாரிசை தமக்குப்பின் விட்டுச்சென்றிருந்தால் பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் இறந்துபோனவருக்குள்ள உரித்தம், விருப்பம் அடுத்தடுத்த வாரிசுரிமைச் சட்டத்தின்கீழ் உயில்வழி அல்லது உயிலில்லாவழி

இறங்குரிமை முறைப்படி இறங்கடைவாகுமேயன்றி எஞ்சுரிமை வழியல்ல என்று வரம்புரை தெளிவுபடுத்துகிறது. ஆண் சந்ததியினர் மட்டுமே எஞ்சியிருப்பார்களேயானால், அவர்கள் தானாகவே பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் உரிமைகள் அல்லது உரித்தம் கொண்டிருப்பர் என தொடர்புடைய காலத்தில் பிரிவு 6 இருந்தவாறு, அதன் தொடக்கப்பகுதி தெளிவாகவே குறிப்பிடுகிறது. அச்சமயத்தில் பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் பெண்களுக்கு எந்த உரிமையும் இருந்ததில்லை. வகை 1-இல் உள்ள பெண் வாரிசு இருப்பாராயின், இறந்துபோனவரின் உரித்தம் சட்டத்தின் வகையங்களின்படி இறங்கடைவாகுமேயன்றி, எஞ்சுரிமைவழி அல்ல என்று வரம்புரை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது என்பது பெண்களின் உரிமைகளைத் தெளிவாகப் பாதுகாப்பதற்கேயாகும். பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் உரிமைகோருகிற இந்து ஒருவருக்குள்ள உரித்தம் என்பது அவரது இறப்பை ஒட்டி முன்பு அச்சொத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால், அவருக்கு அச்சொத்தில் ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய பங்காகக் கொள்ளப்படுதல்வேண்டும் என்று பிரிவு 6-இன் முதலாம் விளக்கம் தெள்ளத்தெளிவாக்குகிறது. தற்போதைய வழக்கில், மூல கவுண்டரின் இறப்பை ஒட்டி முன்பே பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தால், அவரும், 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகளும் சொத்துகளில் ஒவ்வொருவரும் 1/3 பங்குக்குரியவர்களாவர். அச்சமயத்தில் இருந்தவாறான சட்டப்படி, பெண் வாரிசுகளுக்கு எதுவும் சென்றிருக்காது. இருப்பினும் பாகப்பிரிவினை உண்மையில் நடைபெறாததாலும், வகை 1 பெண் வாரிசுகள் இருந்ததாலும், மூல கவுண்டரின் 1/3 பங்கு வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 8-இன்படி வகை 1-இல் உள்ள சட்டப்படியான வாரிசுகளுக்கு இறங்கடைவதாகும்.

11. **குருபாத் கண்டப்ப மாக்டம் -எதிர்- உறிராபாய் கண்டப்ப மாக்டம் மற்றும் பலர்**[1] என்ற வழக்கில் ஓர் இந்து விதவை வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவுகள் *6* மற்றும் *8*-இன்படி என்ன பங்கு பெறுவார் என்பதே முக்கிய பிரச்சினையாகும். பாகப்பிரிவினை செய்யப்பட்டதாக கருதப்படும் ஒரு பாகப்பிரிவினை, பிறப்புவழி பங்குரிமை கொண்ட இறந்துபோனவரின் இறப்பை ஒட்டிய முந்தைய காலத்திற்கு வரையறுக்கப்படமுடியாது, ஆனால் ஒரு உண்மையான பாகப்பிரிவினையிலிருந்து வரும் "அனைத்து விளைவுகளும் தர்க்கரீதியாக கணக்கிடப்படவேண்டும், அதாவது வாரிசுகள் ஒருவருக்கொருவர் பிரிந்துவந்துவிட்டனர் என்றும், இறந்துபோனவரின் ஆயுட்காலத்தில் நடந்த பாகப்பிரிவினையில் ஒரு பங்கைப் பெற்றிருந்தனர் என்பதன் அடிப்படையில் அவர்களின் பங்கு உறுதிப்படுத்தப்படவேண்டும்" என்பதாகும். உள்ளார்ந்த உறுதியளிக்கக்கூடிய ஒன்றாக கருதப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய பாகப்பிரிவினையை பிந்தைய கால கட்டத்தில் மீண்டும் மாற்றியமைக்க கோரமுடியாது.

12. **சொத்துவரி ஆணையர், கான்பூர் மற்றும் பலர் -எதிர்- சந்தர் சென் மற்றும் பலர்**[2] என்ற வழக்கில் ஒரு தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான ஒரு கூட்டுக் குடும்பத் தொழில் தொடர்பான பிரச்சினை இருந்தது. இந்தத் தொழில் பிரிக்கப்பட்டு, அதன்பின்னர் ஒரு கூட்டாண்மை நிறுவத்தால் நடத்தப்பட்டு, அதில் இருவரும் கூட்டாளிகளாக இருந்தனர். தந்தையார் தனது மகன், இரண்டு பேரன்கள் ஆகியோரையும், நிறுவத்தின் கணக்கிலுள்ள இருப்புத் தொகையையும் விட்டுவிட்டு

---

1. (1978) 3 எஸ்.சி.சி. 383

2. (1986) 3 எஸ்.சி.சி. 567

இறந்துவிட்டார். இறந்துபோனவரால் விட்டுச்செல்லப்பட்ட கணக்கிலுள்ள இருப்புத்தொகை கூட்டுக் குடும்பச் சொத்தாக கருதப்படவேண்டுமா? அல்லது வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 8-இன்படி அச்சொத்து வகை 1-இலுள்ள சட்டப்படியான வாரிசுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவேண்டுமா? என்பதே அதில் எழுந்த பிரச்சினையாகும். வாரிசுரிமைச் சட்டம் அனைத்து மிதாக்ஷரா சட்டத்தையும் ஒதுக்கித் தள்ளிவிடுகிறது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்தது. தீர்ப்புரையின் தொடர்புடைய பகுதி பின்வருமாறு எடுத்துரைக்கப்படுகிறது:-

> "22. ....இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 8-இன்கீழ் ஓர் இந்து மீது இறங்கடைவான சொத்து அவரது கையிலும் அவருக்கு நேர்முகமாக அவரது சொந்த மகனிடத்திலும் இந்து பிரிக்கப்படாத குடும்பச் சொத்தாக இருக்கும் என்றும், இது வகை 1-இல் குறிப்பிடப்பட்டுள்ள வாரிசுகளுக்கிடையே இரண்டு பிரிவுகளை உருவாக்குவதாகும் என்றும், ஆண் வாரிசுகளிடமும், அவர்களுக்கு நேர்முகமாக மகனிடமும் இந்து கூட்டுக் குடும்பச் சொத்தாக இருக்கும் என்றும், இது தொடர்பாக பெண் வாரிசுகளுக்கு அத்தகைய கருத்தைப் பயன்படுத்தவோ, கருத்துக்கொள்ளவோ முடியாது என்றும் இன்று தீர்மானிப்பது கடினமேயாகும். பிரிவு 8-இன் கீழ் இணைப்புப் பட்டியலில் வகை 1-இல் உள்ள வாரிசுகள் விதவை, தாய், காலஞ்சென்ற மகனின் மகள், இன்னும் பிறர் ஆகியோரை உள்ளடக்கியது எனக் குறிப்பிடலாம்."

அதற்குட்பட்டு, வாரிசுரிமைச் சட்டம், பிரிவு 8-இன்படி இருப்புத் தொகை மரபுரிமையாக வந்தடையும் என்று உத்தரவிடப்பட்டது.

13. **உரிய ஆணையம் (வ.வ. துறை) மற்றும் பலர் -எதிர்- எம். ஆரி.:புல்லா மற்றும் பலர்**[3] என்ற வழக்கில் எழுந்த பிரச்சினை யாதெனில், வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவுகள் 6 மற்றும் 8-இன்படி வாரிசுரிமையாக பெறப்பட்ட சொத்து கூட்டு உரிமையாளர்களின் சொத்தாக அல்லது கூட்டுக் குடும்பச் சொத்தாக கருதப்படவேண்டுமா? என்பதேயாகும். நீதிமன்றம் பின்வருமாறு தீர்மானித்ததாவது:-

> "3. ...இந்த நீதிமன்றம், சி.டபிள்யூ.டீ. -எதிர்- சந்தர் சென் என்ற வழக்கில் இந்து வாரிசு சட்டத்தின் பிரிவு 8-இன் கீழ் இறங்கடைவாக வரும் சொத்து, அச்சொத்தினை மரபுரிமையாக பெறும் நபரின் தனிப்பட்ட சொத்தேயன்றி பிரிக்கப்படாத இந்து குடும்பத்தின் சொத்து அல்ல. உள்ளபடியாக, சிறப்பு அனுமதி மனுவில் 2 முதல் 5 வரையிலான எதிர்மேல்முறையீட்டாளர்கள், மேற்படி டி.எம். துரைசாமியிடமிருந்து பிரச்சினைக்குரிய சொத்தை மரபுரிமையாகப் பெற்றதாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, அவர்கள் அதனை கூட்டு நிலச் சொத்துரிமையினராக அல்லாமல் பொது நில சொத்துரிமையினராக வைத்திருந்தனர்."

14. மேற்கூறிய வழக்குகளில் வகுத்துரைக்கப்பட்டுள்ள கோட்பாடுகளைப் பொருத்திப் பார்க்கையில், மூல கவுண்டரின் மரணத்திற்குப் பிறகு, அவர் வகை 1

---

3. (2002) 10 எஸ்.சி.சி. 342

பெண் வாரிசுகள் பலரை விட்டுவிட்டு இறந்துவிட்டதால் பிரிவு 8-இன் வகையங்களின்படி, பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் அவருக்குள்ள உரித்தம் இறங்கடைவாக அமையும் என்பது தெளிவாகிறது.

15. இக்கருத்தை எடுக்க மற்றொரு காரணமும் உள்ளது. உயில்வழியாக அல்லது வேறுபிற விருப்பாவண ஏற்பாட்டின் வழியாக அயலடைவு செய்யப்படத்தக்க சொத்தின் பங்கு எதனையும் இந்து எவரும் அயலடைவு செய்யமுடியும் என வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 30 தெளிவாக வகுத்துரைக்கிறது. மிதாக்ஷரா பங்குரிமைச் சொத்தில் இந்து ஆண் ஒருவருக்குள்ள உரித்தம் பிரிவு 30-இன் பொருளின்படி அவரால் அயலடைவு செய்யப்படக்கூடிய சொத்தாக கருதப்படவேண்டும் என்பதை பிரிவு 30-க்கான விளக்கம் தெளிவாக வகைசெய்கிறது. மிதாக்ஷரா பங்குரிமையில் இந்து ஆண் ஒருவருக்குள்ள உரித்தமானது, பெரிதும் அவரது சுயசம்பாத்திய சொத்துபோன்றே உண்மையில் இருக்கவேண்டும் என்று சட்டம் இயற்றுவோர் திட்டமிட்டதாக இது பொருளாகிறது. பிரிவு 30-ஐ, பிரிவு 19 உடன்சேர்த்து நாம் படிக்கும்போது, அது உயில் எழுதி வைக்காமல் இறந்தவரின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாரிசுகள் ஒருசேர அடைகிறபோது சொத்தினை அவர்கள், கூட்டு நிலச் சொத்துரிமையர் என அல்லாமல் பொதுநிலச் சொத்துரிமையினராக தலைக்கு ஒரு பங்கு எனச் சொத்தினை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வகைசெய்கிறது. ஒரு குடும்ப ஏற்பாட்டில் சொத்து பிரிக்கப்பட்டு, பங்கீடு செய்யப்படும் அல்லது கையாளப்படும்வரையில், அச்சொத்தானது, பொதுநிலச் சொத்துரிமையினராக சட்டப்படியான வாரிசுகளால் கூட்டாக வைத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும், அச்சொத்து கூட்டுக் குடும்பச் சொத்தாக கருதப்படக்கூடாது எனவும் இது தெளிவாகக் குறிப்பிடுகிறது.

16. சொத்து, கூட்டுக் குடும்பச் சொத்து என்று அனுமானித்தாலுங்கூட 1-ஆம் பிரதிவாதியான கர்த்தா, இளவர் வாதியின் இயல்புக் காப்பாளராய் இருந்தார் என்ற வாதத்தை நாங்கள் ஏற்க இயலாது. கர்த்தா, இந்து பிரிக்கப்படாத குடும்பத்தின் மேலாளராக இருந்து முழு குடும்பத்தின் சார்பாக செயல்படுகிறார். கூட்டுக் குடும்பச் சொத்தில், இளவர் ஒருவரின் பிரிக்கப்படாத உரித்தத்தைப் பொறுத்தவரை சட்டப்பிரிவு 6 பொருந்தாது என்பது உண்மையென்றாலும், இந்து பிரிக்கப்படாத குடும்பம் என்ற ஒன்று இருப்பதாக அனுமானித்து, அனைத்து குடும்ப உறுப்பினர்களும் அதனைக் கலைப்பதற்கு முடிவெடுத்திருக்கும் ஒரு சூழலை நாம் இங்கு விவாதித்துக்கொண்டிருக்கிறோம்.

17. கர்த்தா, கூட்டுக் குடும்பச் சொத்தின் மேலாளர் ஆவார். அவர் கூட்டுக் குடும்பத்தின் இளவர் உறுப்பினர்களின் காப்பாளர் அல்லர். சட்டப்பிரிவு 6 என்ன வகைசெய்கிறதென்றால் இந்து இளவர் ஒருவரின் இயல்புக் காப்பாளர், கூட்டுக் குடும்பச் சொத்தில் இளவரின் பிரிக்கப்படாத உரித்தத்தைப் பொறுத்தவரையில், அதைத் தவிர அனைத்து செயல்முறைகளுக்கும் அவரது காப்பாளராயிருக்கவேண்டும் என்பதாகும். இயல்புக் காப்பாளர், கூட்டுக் குடும்பச் சொத்தில் இளவரின் பங்கினைத் தீர்வு செய்ய இயலாது என்பதே இதன் பொருளாகும். காரணம் என்னவென்றால், கூட்டுக் குடும்பச் சொத்தின் கர்த்தாதான் சொத்தின் மேலாளர் ஆவார். இருப்பினும், கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுக்கிடையே குடும்ப ஏற்பாடு செய்யப்படும்போது இக்கோட்பாடு பொருந்தாது. அத்தகைய பிரிவினையின்போது உறுப்பினர்கள் சிலர் கர்த்தாவுக்கு ஆதரவாக தங்கள் பங்கைக் கைத்துறக்கும்போது, கர்த்தாவுக்கு ஆதரவாக இளவரின் பங்கு கைதுறக்கப்பட்டிருப்பதால் அந்த இளவரின் காப்பாளராக கர்த்தா செயல்படமுடியாது என்பது தெளிவாகிறது. மேலும் உரித்தம் தொடர்பான

முரண்பாடுகள் இருக்கும். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில், இயல்புக் காப்பாளராக இருக்கக்கூடியவர் தாயாரேயாவார், ஆகவே தாயாரால் நிறைவேற்றப்பட்ட ஆவணம், செல்லாத ஆவணம் என்று கூற முடியாது. அப்படியே இது சட்டத்தின் பிரிவு 8-இன்படி செல்லத்தகாத ஆவணமாக இருந்தாலும், அது வாதி உரிமை வயதடைகிற மூன்று ஆண்டுகளுக்குள் எதிர்த்துரைக்கப்பட்டிருக்கவேண்டும்.

18. வாதியால் தொடரப்பட்ட வழக்கு சரியானதல்ல என்று அவருக்கே தெரிந்திருந்தது என்று தீர்மானிக்க வேறு காரணங்களும் உள்ளன என்பதை நாம் கவனிக்கலாம். 10.3.1973-ஆம் தேதியிடப்பட்ட விடுதலைப் பத்திரம் நிறைவேற்றப்பட்டபோது வாதி இளவராக இருந்தபோதிலும், அவள் மிகவும் இளையவர் அல்ல, அவளுக்கு சுமார் 17 வயதிருக்கும். 24.4.1980-ஆம் தேதியன்று 1 மற்றும் 2-ஆம் பிரதிவாதிகளுக்கு (இரண்டு சகோதரர்கள்) இடையே பாகப்பிரிவினை நடந்தது, இப்பாகப்பிரிவினையில் தற்போது வாதியால் கோரப்படும் சொத்து உட்பட அனைத்து சொத்துகளும் அடங்கும். முறையாக பதிவு செய்யப்பட்ட 24.4.1980-ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் வாதியின் கணவரால் சான்றொப்பச் சாட்சியாக கையொப்பமிடப்பட்டது. சில நாட்களுக்குப் பிறகு 30.4.1980 அன்று இரு சகோதரர்களும் 5-ஆம் பிரதிவாதியான தங்கள் தாயாருக்கு ஆதரவாக ஓர் அறுதியாவணத்தை நிறைவேற்றினர், அதுவும் வாதியின் கணவரால் சாட்சியாக கையொப்பமிடப்பட்டது. இப்பாகப்பிரிவினைக்குப் பிறகு, இரு சகோதரர்களும் இந்த சொத்தின் சுவாதீனத்தில் இருந்துகொண்டு, இச்சொத்திலிருந்து பல்வேறு உரிமைமாற்றங்களை நிறைவேற்றினர். ஆகவே வாதி, பல்வேறு உரிமைமாற்றங்கள் குறித்து அறிந்திருக்கவில்லை என்பது நம்புதற்காியதாகும்.

19. மேற்கூறியவற்றை கருத்திற்கொண்டு, நாங்கள் மேல்முறையீட்டை அனுமதித்து, 30.7.2008-ஆம் தேதியிடப்பட்ட உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை நீக்கறவு செய்து, 29.11.1994-ஆம் தேதியிடப்பட்ட விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையை மீட்டளிக்கிறோம். விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இருப்பின், அவை தீர்வு செய்யப்படும்.

மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். அப்துல் நசீர்

மாண்புமிகு நீதியரசர் திரு. தீபக் குப்தா

புது தில்லி,

08.01.2020

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."